
கன்னியாகுமரி மாவட்ட
பயிற்சி
30-06-2016
மையம்

# மாவட்ட காசநோய் மையம்

கன்னியாகுமரி மாவட்ட மருத்துவக்கல்லூரி வளாகம்
ஆசாரிபள்ளம், கன்னியாகுமரி மாவட்டம். தொலைபேசி: 04652-269043

தேதி : 30.05.2016

## அங்கன்வாடி பணியாளர்களுக்கு காசநோய் பயிற்சி

மாவட்ட காசநோய் மையத்தில் அங்கன்வாடி பணியாளர்களுக்கான காசநோய் பயிற்சி இன்று முதல் தொடங்கியது. பயிற்சி முகாமை துவக்கி வைத்த கன்னியாகுமரி மாவட்ட காசநோய் தடுப்புத் திட்டத் துணை இயக்குனர் மருத்துவர் வி.பி.துரை அவர்கள் உரையாற்றும்போது,

நாடு வளம் பெற வேண்டுமானால் இரு துறைகள் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். ஒன்று கல்வித்துறை. மற்றொன்று மருத்துவத்துறை. இவ்விரு துறைகளும் நன்றாக செயல்பட்டால் ஆரோக்கியமான சமூகம் உருவாகும். இவ்விரு துறைகளும் சந்திக்குமிடம் அங்கன்வாடி மையம். வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலனை காப்பதோடு குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வியையும் போதிக்கும் மாபெரும் பணியை அங்கன்வாடி ஊழியர்கள் செய்து வருகிறார்கள். திருத்தியமைக்கப்பட்ட காசநோய் தடுப்புத்திட்டத்தில் டாட்ஸ் (நேரடிக்கால குறுகிய சிகிச்சை – DOTS - Directly Observed Treatment Short Course) எனப்படும் சிகிட்சை நோயாளி விரும்பும் இடத்தில் வீட்டுக்கு அருகில் மாத்திரையை உட்கொண்டு நோயியிலிருந்து பூரணகுணமடைவது என்பதாகும். இந்த டாட்ஸ் சென்டர்கள் பெரும்பாலும் அங்கன்வாடி மையங்களில் செயல்பட்டு வருகின்றன.

அங்கன்வாடி பணியாளர்கள் மூலம் காசநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு 6 மாதம் முதல் 8 மாதம் வரை இலவச மருந்துகளை அளித்து காசநோயாளிகள் நோயிலிருந்து பூரண குணமடைகிறார்கள். இந்த பணியினை ஏற்கனவே சிறப்பாக செய்து வருகிறார்கள் இருப்பினும் திறம்பட செய்ய இந்த பயிற்சி அவர்களுக்கு உதவியாக இருக்கும். மேலும் காசநோய் பாதிப்புக்குள்ளாகும் நபர்களை ஆரம்பத்திலே கண்டறிந்து, சிகிச்சை பெற இவர்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவைப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள சுமார் 1000 அங்கன்வாடி பணியாளர்களுக்கு இன்று முதல் நாளொன்றுக்கு 50 பேர் வீதம் 20 நாட்கள் பயிற்சி அளிக்க உள்ளோம் என்று கூறினார். கன்னியாகுமரி மாவட்ட காசநோய் தடுப்பு சிறப்பு மருத்துவ அலுவலர் டி.முத்துகுமார், எ.கபீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

துணை இயக்குனர் (காசநோய்)
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகர்கோவில்.